பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 21 வெள்ளிக்கிழமை 05.03.2021 கதிர் 351

## 2 ஆயிரம் கிலோ மஞ்சள் புத்தளத்தில் பிடிபட்டது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.05

இந்தியாவில் இருந்து புத்தளம் வழியாக கடல் மார்க்கத்தில் கடத்தி வரப்பட்ட 2 ஆயிரத்து 219 கிலோ மஞ்சள் இன்று அதி காலை 2 மணியளவில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து படகு ☞ 2



# இலங்கையின் கழுத்து ஐ.நாவில் நெரிக்கப்பட மஹிந்தவே காரணம்

### சஜித் அணி குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என்று அரசை வலியுறுத்துகின்றோம்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சர்வதேசத்துடன் சுமுகமான தொடர்புகளைப் பேணினால் மாத்திரமே சர்வதேச நடவடிக்கைகளை ☞ 2

## இரணைதீவில் ஜனாஸா புதைத்தல் இனி நடக்காது என்கிறார் டக்ளஸ்!



இரணைதீவில் ஜனாஸா புதைக்கும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ளாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் இன்று இடம்பெற்ற ஒருங்கிணைப்பு ☞ 2

## பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்காமல் 'ஈஸ்டர்' தாக்குதலுக்குத் தீர்வு காண முடியாது!

### அமைச்சர் வாசுதேவ சுட்டிக்காட்டு



உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்காமல் தீர்வு காண முடியாது.

– இவ்வாறு நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். ☞ 2

# ஐ.நா. பிரேரணை வாக்கெடுப்பில் இலங்கை தோற்றால் பேராபத்து!

### அரசுக்கு எதிர்க்கட்சி பகிரங்க எச்சரிக்கை



**கொழும்பு, மார்ச் 05**

**ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கை தோல்வியடைந்தால் பாரதூரமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படலாம்.**

**– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.** ☞ 2

## மேற்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் அரசின் முடிவுக்கு சுதந்திரக் கட்சி போர்க்கொடி



கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையத்தை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கும் அரசின் முடிவுக்கு அரச பங்காளிக் கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

துறைமுகம், விமான நிலையம் ஆகியன தேசிய வளங்களாகும். அவற்றை வெளியாருக்கு வழங்குவதை ஏற்க முடியாது என்று சு.கவின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார். ☞ 2

## 'தாமரை'யுடன் களமிறங்கும் விக்கி

### 'திவயின' பரபரப்பு செய்தி



வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளை மையப்படுத்தி 'தாமரை' சின்னத்தில் கட்சியொன்றை ஆரம்பிக்க வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்று 'திவயின' என்ற சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் பாரதீய ஜனதாக் கட்சி இலங்கையிலும் நிறுவப்படும் எனத் தகவல் வெளியான நிலையில் ☞ 2




## இரணைதீவில் அடக்கம் தீர்மானம் வாபஸ் பெறுக!

### மாவை வலியுறுத்து

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம் சகோதரர்களின் ஜனாஸாக்களை இரணைதீவில் அடக்கம் செய்யும் தீர்மானத்தை அரசு உடனே திரும்பப் பெறவேண்டும். ☞ 2

## முதலாவது கொரோனா சடலம் இன்று ஓட்டமாவடி மஜ்மா நகரில் நல்லடக்கம்



கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் உடல்களை அடக்கம் செய்யலாம் என்று சுகாதார அமைச்சின் சுற்று நிருபத்துக்கமைய இன்று வெள்ளிக்கிழமை முதலாவது சடலம் ஓட்டமாவடி மஜ்மா நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## இரணைதீவில் ஜனாஸா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுக் கூட்டத்தில் இந்த விடயத்தை அவர் தெரிவித்தார்.

இரணைதீவு மக்கள் சார்பாக கலந்து கொண்ட பிரதிநிதிகளால் இரணைதீவு பிரதேசம் ஓர் பூர்வீக பிரதேசம் என்றும், 30 வருடங்களிற்கு பின்னர் அந்த இடத்திற்கு சென்றபோதும் அங்கே இருப்பிடம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை, அங்கு பெரும் காடுகளாக காணப்படுகின்றது என்றும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

காடு பற்றிப்போயுள்ள இடங்களை கத்தி, கோடாலி போன்ற ஆயுதங்களை கொண்டு துப்பரவு செய்ய முடியாதுள்ளது. அதனை இயந்திரங்கள் மூலமே துப்பரவு செய்ய வேண்டி உள்ளது. இவ்வாறான வசதி குறைபாடுகள் உள்ள போதும் அந்த பிரதேசத்தில் தொழிலிற்காகவும், பூர்வீக இடத்தில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும் அங்கு சென்றுள்ளோம். இந்த நிலையில் கடந்த இரண்டு நாள்களிற்கு முன்னர் இந்த ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு இரணைதீவை தெரிவு செய்து அங்கே ஆரம்ப வேலைகளை செய்திருக்கின்றனர். இது எங்களிற்கு மன வேதனையையும், அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அந்த ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்பதற்காக நாமும் குரல் கொடுக்கின்றோம். ஆனால் அவர்களின் இடங்களில் அடக்கம் செய்யவேண்டும். இன்றைய தினம், காலைமுதல் இரணைதீவிற்கு செல்வதற்கு கடுமையான தடைகளை கடற்படையினர் விதித்துள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஏதோவொரு விதத்தில் இரணைதீவு தெரிவு செய்யப்பட்டிருக்கும் என்று நம்புகின்றேன். இது தொடர்பில் பிரதமர் மற்றும் சம்மந்தப்பட்டவர்களுடன் பேசியிருக்கின்றேன். இந்த பிரதேசத்தில் அடக்கம் நடைபெறாது என்று நம்புகிறேன் என்றார் அவர்.

## 'தாமரை'யுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு விக்கி கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

இந்தநிலையிலேயே, தாமரை சின்னத்தில் விக்னேஸ்வரன் புதிய கட்சியை ஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றார் என்று அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2 ஆயிரம் கிலோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம்கடத்தி வரப்பட்டு, புத்தளம் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டு, அங்கிருந்து வாகனம் ஒன்றில் ஏற்றிக் கொண்டு கடத்த முற்பட்ட சமயம் கடற்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் கடற்படையினர் அந்த இடத்தில்மேற்கொண்ட தேடுதலின்போது மஞ்சளும் அதனைக் கடத்திய ஆறு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட ஆறு சந்தேக நபர்களும் மஞ்சளைக் கடத்தப் பயன்படுத்திய கன்டர் ரக வாகனத்துடன் சட்ட நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## இலங்கையின் கழுத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும்.

போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் முதன் முதலில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவே ஐ.நாவிடம் உறுதியளித்தார்.

இலங்கையில் இறுதிக்கட்டப் போரின்போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்று அப்போதைய ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ – மூன் நாட்டுக்கு வந்தபோது தெரிவித்தார். இதன்போது மஹிந்த ராஜபக்ஷவே அவருடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

அந்த ஒப்பந்தத்துக்கு ஏற்பவே இலங்கையில் உள்நாட்டுப் போரின்போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் ஆராய்வதற்கு ஆணைக் குழுவொன்றை நியமித்து, குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது.

எனினும், இலங்கை அதனைச் செய்யவில்லை. இவ்வாறு வழங்கப்பட்ட வாக்குறுதியே இன்று இலங்கையின் கழுத்தை இறுக்கிக் கொண்டிருக்கின்றது. அதன் காரணமாகவே 2011 – 2014 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு எதிராக ஐ.நா. தீர்மானங்களை முன்வைத்தது.

அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க முடியாததன் காரணமாகவே அன்று மஹிந்த ராஜபக்ஷ தேர்தலுக்குச் சென்றார்.

2015இல் நாம் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் சர்வதேசத்தைப் பகைத்துக் கொள்ளாமல் சுமுகமான உறவைப் பேணினோம். எம்மால் செய்யக் கூடியவற்றையும் , செய்ய முடியாதவற்றையும் தெளிவுபடுத்தினோம்.

போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டபோது, நாம் அதற்கு இனக்கம் தெரிவிக்கவில்லை.

உள்நாட்டு விசாரணைகளின் ஊடாக தீர்வைக் காண்பதாகக் கூறினோம். இதற்கான நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்தபோது அப்போதைய எதிர்க்கட்சித்தலைவர் மஹிந்தராஜபக்ஷ அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். எவ்வாறிருப்பினும் பயங்கரவாதத்தை ஒழித்துப் பெற்றுக்கொண்ட வெற்றியை முறையாக சர்வதேசத்துக்குத் தெளிவுபடுத்த வேண்டியது அரசின் கடமையாகும் – என்றார்.

## பிரதான சூத்திரதாரி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, முழுமையற்ற அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

விசாரணை அறிக்கை குறித்து பல விமர்சனங்கள் எழுந்துள்ளன குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆளும் தரப்பு உறுப்பினர்களும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்கள். அறிக்கை குறித்து எழுந்துள்ள விமர்சனங்களுக்குத் தீர்வை முன்வைப்பது அரசின் பொறுப்பாகும்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்காமல் தீர்வு காண முடியாது. ஆகவே, இந்த விடயம் குறித்து கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

குறைபாடுகள் குறித்து ஆராய விசேட பொறிமுறை வகுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, மாற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என எதிர்பார்க்கின்றோம்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் அறிக்கை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மையப்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிடுவதும் அதற்கு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் மாற்றுக் கருத்தைத் தெரிவிப்பதும் காணக் கூடியதாக உள்ளது.

வாதப்பிரதிவாதங்கள் கூட்டணிக்குள் தேவையற்ற பிரச்சினையை ஏற்படுத்தும். இந்த விடயம் குறித்தும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேசப்பட்டுள்ளது.

குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கை அனைத்து மக்களும் குறிப்பாக குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் அமைய வேண்டும்.

அறிக்கையைக் கொண்டு அரசை விமர்சிக்க முடியாது. அரசியல் தலையீடுகள் இல்லாமல் விசாரணை அறிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன –என்றார்.

## இரணைதீவில் அடக்கம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராசா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

இலங்கையிலும் கொரோனா வைரஸ் தொடர்ந்து தீவிரமடைந்து பரவி வருகின்றது. இதனிடையே கொரோனா வைரஸ் நோயால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை எங்கே அடக்கம் செய்வதென்பதில் மேலும் குழப்பமான இன, மத முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதைக் கண்டிக்க வேண்டும்.

முஸ்லிம்களின் ஜனாஸா அடக்கம் செய்யும் பிரச்சினை தீர்ந்து விட்டது. ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அறிக்கையிலிருந்து இந்தப் பிரச்சினையை நீக்கிவிடுமாறு அரசு ஜெனிவா அமர்வில் கோருகின்றது.

இந்தக் கோரிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பிரேரணை தொடர்பில், முஸ்லிம் நாடுகளின் வாக்குகளைக் கவருவதற்காகும். இந்த முயற்சி, முஸ்லிம் மக்களையும் நாடுகளையும் ஏமாற்றும் முயற்சியாகும்.

கொரோனாவால் உயிரிழந்த ஜனாஸாக்களை கிளிநொச்சி, பூநகரிப் பிரதேசத்திலுள்ள இரணைதீவில் அடக்கம் செய்வதற்கான அரசின் தீர்மானத்தை அங்குள்ள மக்களும் கிறிஸ்தவ மதத் தலைவர்களும் இஸ்லாமிய மதத் தலைவர்களும்கூட எதிர்த்துப் போராடுகின்றனர்.

கொரோனா வைரஸ் தொடர்பான மருத்துவநிபுணர்குழுவும் இரணைதீவைக் குறித்துச் சொன்னதாக இல்லை. அக்குழுவின் சிபார்சுகளில் முஸ்லிம் மக்களின் இறப்பு கொரோனாவால் இடம்பெற்றால் ஜனாஸாக்களை அந்தந்த இடங்களில் அடக்கம் செய்யலாம் என்றே அறிவித்துள்ளது.

அவ்வாறிருக்க அரசு ஏன் இந்தத் தவறான முடிவைஎடுத்தது? இரணைதீவில் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கு யாரின் சிபார்சு பெறப்பட்டது?

எனவே, அரசு இரணைதீவில் கொரோனா ஜனாஸாக்களை அடக்கம் செய்ய எடுத்த தீர்மானத்தை உடனே திரும்பப் பெற வேண்டும். பதிலாக அரசு இஸ்லாமிய மதத்தலைவர்களுடன் கலந்தாலோசித்துப் பொருத்தமான இடங்களில் கொரோனாவால் உயிரிழப்பவர்களின் ஜனாஸாக்களை இஸ்லாமிய மத ஆராதனையுடன் நல்லடக்கம் செய்யும் தீர்மானத்தை அறிவிக்க வேண்டும் – என்றுள்ளது.

## மேற்கு முனையத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் அதானி நிறுவனத்தின் பங்களிப்புடன், இலங்கை துறைமுக அதிகார சபையுடன் இணைந்து அரச – தனியார் வர்த்தகமாக துறைமுகத்தின் மேற்கு முனையத்தை நிர்மாணித்து அபிவிருத்தி செய்வதற்கு அரசு முடிவெடுத்துள்ளது.

அரசின் இந்த முடிவுக்கு தேசியவாத அமைப்புகளும், சில தொழிற்சங்கங்களும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன. இவ்வாறானதொரு நிலையிலேயே 14 நாடாளுமன்றஉறுப்பினர்களைக்கொண்ட அரசின் பிரதான பங்காளியான சுதந்திரக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

அதேவேளை, கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை அதானி நிறுவனத்துக்கு வழங்கும் முடிவுக்குக்கடும்எதிர்ப்புகள் வலுத்ததால் அந்தத் திட்டத்தை அரசு கைவிட்டது. இந்த நிலையிலேயே மேற்கு முனையத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. பிரேரணை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர், இராஜதந்திர ரீதியான நெருக்கடிகளும் எமது யோசனைகளும்' என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் போர்க்குற்றச்சாட்டுக்களின் கீழ் இலங்கை மீண்டுமொருமுறை வாக்கெடுப்பை எதிர்கொள்ளும் நிலைமைக்கு தற்போது தள்ளப்பட்டிருக்கின் றது.

இலங்கை அதில் வெற்றியடையுமா? அல்லது தோல்வியடையுமா? என்பது குறித்து இப்போது உறுதியாகக் கூற முடியாது. எனினும், இதனைத் தொடர்ந்து எமது நாடு பாரதூரமான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பது மாத்திரம் தெளிவாக தெரிகின்றது.

கடந்த 2009ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போரின்போது, இலங்கை இராணுவம் போர்க்குற்றங்களில் ஈடுபட்டது என்ற அடிப்படையிலேயே தற்போதைய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. முன்னரும் இந்த யோசனை முன்வைக்கப்பட்டது. அதில் நாம் தோல்வியடைந்தோம்.

அதனைத் தொடர்ந்து ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நிறுத்தப்பட்டது. அதன் விளைவாக அதனை மையப்படுத்திய பொருளாதார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்தன. மீண்டும் அதேபோன்றதொரு நிலை ஏற்படுமா என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

இதேவேளை, கடந்த 2015ஆம் ஆண்டில் ஆட்சிப்பீடமேறிய அரசு, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கியதுடன், அந்தத் தீர்மானத்தில் முன்வைக்கப்பட்ட சில பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியதன் ஊடாக மீண்டும் ஜி.எஸ்.பி வரிச்சலுகையைப் பெற்றுக்கொண்டது.

இந்தநிலையில், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள புதிய பிரேரணை மீதான வாக்கெடுப்பில் இலங்கை தோல்வியடைந்தால், மீண்டும் அத்தகைய அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிடுமா என்ற கேள்வி இருப்பதுடன் அது நாட்டு மக்கள் அனைவரின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் – என்றார்.

## முதலாவது கொரோனா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மஜ்மா நகரில் கொரோனாத் தொற்று மூலம் மரணித்த முஸ்லிம்களின் உடல்களை அடக்கம் செய்வதற்கு சிபார்சு வழங்கப்பட்டுள்ள நிலையில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி வரை இரண்டு சடலங்கள் அடக்கம் செய்யப்பட்டது.

இதேவேளை இன்று வெள்ளிக்கிழமை கொரோனா தொற்று மூலம் மரணித்த ஐந்து முஸ்லிம்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்படவுள்ளன. அந்த வகையில் ஏறாவூர் பிரதேசத்தை சேர்ந்த இரு சடலங்களும், காத்தான்குடியில் உள்ள மூன்று சடலங்களுமாக ஐந்து சடலங்கள் அடக்கம் செய்யப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றன.

மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் காணிகளை அண்மித்த இடங்களின் இராணுவத்தினர் பலத்த பாதுகாப்புடன் செயற்ப்படுவருகின்றமையுடன், அனுமதி இல்லாதவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சடலம் அடக்கம் செய்யப்படும் இடத்திற்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அஹமட் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொரோனாத் தொற்றினால் மரணித்தவர்களின் உடல்களை குறித்த காணியில் அடக்கம் செய்வதற்காக வெக்கோ வாகனங்கள் மூலம் குழிகள் தோண்டும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றமையுடன், ஆறு அடி ஆழம், ஆறு அடி நீளம், மூன்று அடி அகலம் என்பவற்றில் குழிகள் தோண்டப்பட்டுள்ளன, ஒவ்வொரு குழிக்கும் இடையில் மூன்று அடி இடைவெளி விடப்பட்டுள்ளது.

இதனை மட்டக்களப்பு மாவட்ட சுகாதார பிராந்திய பணிமனை அதிகாரிகள், இராணுவ உயர் அதிகாரிகள், மாவட்ட செயலக அதிகாரிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள், ஓட்டமாவடி பிரதேச செயலக அதிகாரிகள், ஓட்டமாவடி பிரதேச சபை அதிகாரிகள் ஆகியோர் நேரில் பார்வையிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உறங்கும் உண்மைகள்

ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டுத் தாக்குதல்கள் நடந்து ஏறத்தாழ இரண்டு வருடங்களாகப் போகின்றன. ஆனால் அது தொடர்பில் நீதி, நியாயம் நிலைநாட்டப்படவில்லை என்ற அதிருப்திக்குரல் தீவிரம் அடைந்திருக்கின்றதே தவிர பிரயோசனம் ஏதும் நடக்கவில்லை.

பல டசின் கணக்கானோர் கைது செய்யப்பட்டு, சுமார் இரண்டு வருடகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அவ்வப்போது நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டு அவர்களின் தடுப்புக்காவல் நீடிக்கப்படுகின்றதே தவிர, யாருக்கும் எதிராக உருப்படியான சட்ட நடவடிக்கை ஏதும் முன்னெடுக்கப்படவில்லை. யாருக்கும் எதிராகவும் குற்றம் சுமத்தப்படவில்லை. தடுப்புக்காவலில் இருப்போருக்கு எதிராக வழக்குத்தொடுக்கவும் போதிய சாட்சிகள், சான்றாதாரங்கள் இருக்கின்ற மாதிரித் தெரியவில்லை.

இந்தத் தொடர் தாக்குதல் தொடர்பில் நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை நடத்தி முடித்து அறிக்கையையும் சமர்ப்பித்துவிட்டது. அந்த அறிக்கை – பரிந்துரை – அம்பலமாகியும் விட்டது.

ஆனால் அந்தப் பரிந்துரை அறிக்கையில் உருப்படியான விடயம் – பெறுபேறு – ஏதுமேயில்லை என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஜனாதிபதி ஆணைக்குழு ஜனாதிபதியிடம் கையளித்த முழு அறிக்கையே இப்போது பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கின்றதா அல்லது முழுமையான ஓர் அறிக்கையின் முக்கிய விடயங்கள், பகுதிகள் வழகட்டப்பட்ட பின்னர் எஞ்சியவைதான் வெளியிடப்பட்டனவா என்ற சந்தேகமும் சம்பந்தப்பட்ட தரப் பினர் மத்தியில் நீடிப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழு மூலம் திருப்திகரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவாய்ப்புக் கிடைக்கவில்லை, உண்மையான சூத்திரதாரிகளை அம்பலப்படுத்தவோ, தண்டிக்கவோ சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்று தெரிவித்து, அதனை ஆட்சேபிக்கும் விதத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாடு தழுவிய கறுப்புதினம் அனுஷ்டிப்பதற்கு இலங்கை கிறிஸ்தவர்களின் சார்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

இதேசமயம் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை குறித்து விசேட விவாதம், வரும் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் முன்னெடுக்கப் படவிருக்கின்றது.

இந்த அறிக்கையில், மேற்படி தொடர் குண்டுத்தாக்குதல் நடத்தும் முயற்சியைத் தடுத்து நிறுத்தும் வாய்ப்பும் முன் னெச்சரிக்கையும் கிடைத்தும் கூட அதனைச் செய்யத் தவறியமை மூலம் குற்றமிழைத்தவர் என்ற அடிப்படையில் அச்சமயம் பதவியில் இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட பலருக்கு எதிராக குற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த வகையில் இந்த அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட வகையில் தூண்டி விடப்பட்ட ஒன்று என அவரது சுதந்திரக்கட்சியினர் கூறுகின்றனர். ஆனால் இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவையும் அதற்கான ஆணையாளர்களையும் நியமித்தவரே இதே மைத்திரிபால சிறிசேன தான். அவர் ஜனாதிபதியாக இருந்த போது அவர் நியமித்த ஆணைக்குழு உறுப்பினர்கள்தான் இவரையும் குற்றவாளியாகக் கூண்டில் நிறுத்தி குற்ற விசாரணைக்கு உட்படுத்துமாறு கோரி நிற்கும் பரிந்துரையைத் தந்துள்ளனர்.

எது, எப்படி என்றாலும் இந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாகத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ள கருத்தும் நோக்கற்பாலது.

*"ஈஸ்டர் தாக்குதலைப் பயன்படுத்தி எமது அன்றைய நல்லாட்சி அரசை வீழ்த்தி, இன்றைய அரசு அதிகாரத்தைப் பிடித்தது. ஆகவே இந்த தாக்குதல் இன்றைய அரசுத் தரப்பினருக்குத்தான் அரசியல் ரீதியில் பெரும் உதவியாக மாறியுள்ளது. உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் நன்மை பெற்றது இன்றைய அரசு என்ற கோணத்திலும் இது குறித்து விசாரிக்கப்படவேண்டும். அப்போதுதான் உறங்கும் பல உண்மைகள் அம்பலமாகும்"* என மனோ கணேசன் கூறியிருக்கின்றமையும் நோக்கப்படவேண்டும்.

அது மாத்திரமல்ல, இந்த தாக்குதல் விடயத்தில் உள்நாட்டில் நியாயம் கிடைக்காவிட்டால் வெளிநாட்டு விசாரணை வேண்டும் என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித்தின் கருத்தை மனோ கணேசன் வழிமொழிகின்றார். அதுவும் ஊன்றி அவதானிக்கப்பட வேண்டிய நியாயமான கருத்துத்தான்.

# கொழும்பு துறைமுக கிழக்கு முனைய அபிவிருத்தி 2023 இல் நிறைவடையும்!

## ரோஹித அபேகுணவர்தன தெரிவிப்பு



கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய அபிவிருத்தி பணிகளை 2023 இல் நிறைவடைய செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

அத்தோடு இதனை 1,320 மீற்றர் நீளத்துக்கும், 75 ஹெக்டேயர் பரப்பளவிற்கும் அபிவிருத்தி செய்ய எதிர்பார்த்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

440 மீற்றர் நீளம், 20 ஹெக்டேயர் பரப்பளவில் காணப்படும் கிழக்கு முனையத்தை 1,320 மீற்றர் நீளம், 75 ஹெக்டேயர் பரப்பளவிற்கும் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.


இதற்கான செலவு 11,500 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகத் துரிதமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டில் கிழக்கு முனைய அபிவிருத்தி திட்டங்களை முழுமையாக நிறைவடையச் செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

தென்னாசியாவில் முக்கியத்துவம் மிக்க துறைமுக முனையமாக இதனைக் கட்டியெழுப்புவது எமது இலக்காகும். சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இதன் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேவைகளை முழுமையாக நிறைவேற்றும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு துறைமுக அதிகார சபையுடன் இணைந்து கிழக்கு முனையத்தையும் மேற்கு முனையத்தையும் அபிவிருத்தி செய்து , கொழும்பு துறைமுக கட்டமைப்பை ஆசியாவில் பிரதான துறைமுகமாக மாற்றுவது எமது எதிர்பார்ப்பாகும். – என்றார்.

# வைத்தியசாலை ஊழியர்களை ஏற்றிச்சென்ற பஸ் ரயிலுடன் மோதி களுத்துறையில் கோர விபத்து!





வஸ்கடுவ – கொஸ்கஸ் சந்தியில் கொழும்பிலிருந்து தனியார் வைத்தியசாலையின் 11 ஊழியர்களை ஏற்றிச்சென்ற பஸ் ரயிலுடன் மோதி ஏற்பட்ட விபத்தில் பஸ் சாரதி காயமடைந்துள்ளார்.

வடக்கு களுத்துறை – வஸ்கடுவ ரயில் கடவையில் நேற்று வியாழக்கிழமை காலை வைத்தியசாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் கொழும்பு நோக்கிச் சென்றுக் கொண்டிருந்த ரயிலுடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சுற்றுலாப் பயணிகள் தங்கியிருக்கும் ஹோட்டல் ஒன்றில், தங்கியுள்ள நபர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக, தனியார் வைத்தியசாலையில் பணிபுரிந்து வரும் ஊழியர்கள் 11 பேரை அழைத்துச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது பஸ் சாரதி மாத்திரம் காயமடைந்துள்ளமையுடன், அவர் நாகொட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்தில் வைத்தியசாலை ஊழியர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# சட்டத்தரணி ஹிஸ்புல்லாஹ் விவகாரத்துடன் இளம் கவிஞர் அஹ்னாபுக்கு தொடர்பில்லை!

## சி.ஐ.டி. அறிவிப்பு

'நவரசம்' என்ற கவிதைத் தொகுப்பு புத்தகத்தை எழுதியமைக்காக கைது செய்யப்பட்டு நீண்டகாலம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள அஹ்னாப் ஜஸீம் என்ற இளைஞர், சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் சந்தேக நபர் இல்லை என சி.ஐ.டி. கோட்டை நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளது.

இதற்கு முன்னர் அஹ்னாப் ஜஸீமை, ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் தொடர்புடைய விவகாரத்தில் சந்தேக நபராக அறிவித்து சி.ஐ.டி. மன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

இந் நிலையில் நேற்று நீதிமன்றில் இந்த விடயம் தொடர்பில் விவரித்த பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ், அஹ்னாப் ஜஸீம், ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் விவகாரத்தில் சந்தேக நபர் இல்லை எனத் தெரிவித்தார்.


அத்துடன் ஏற்கனவே அவரது பெயரை சி.ஐ.டி. மன்றில் சந்தேக நபராக சில அறிக்கைகளில் குறிப்பிட்டிருந்த நிலையில், நேற்று முன்வைத்த மேலதிக அறிக்கையின் 4 ஆம் பந்தி ஊடாக, அவரை குறித்த வழக்கின் சந்தேக நபர் இல்லை என்பதை அறிவித்துள்ளதாகவும் திலீப பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், அஹ்னாப் ஜஸீம் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் தடுப்புக் காவலின் கீழ் உள்ளார் எனக் குறிப்பிட்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரால் திலீப பீரிஸ், கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றில் உள்ள பீ. 11230/20 எனும் வழக்கில் அவரை விசாரித்து வருவதாகத் தெரிவித்தார்.

இது தொடர்பாக விசாரணைகளை பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சர் லசந்த ரத்நாயக்கவின் கீழ் பிரதான பொலிஸ் இன்ஸ்பெக்டர் பத்திரண, பொலிஸ் இன்ஸ்பெக்டர் ரன்ஜித் உள்ளிட்ட குழுவினர் முன்னெடுத்துள்ளனர். அவர்களும் நேற்று நீதிமன்றில் ஆஜராகியிருந்தனர்.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல்களை தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுக்கும் சி.ஐ.டி., சட்டத்தரணி ஹிஜாஸ் உமர் ஹிஸ் புல்லாஹ்வை கைது செய்திருந்தது. அவருடன் தொடர்புடைய விவகாரத்தில் இளம் கவிஞரான அஹ்னாப் ஜஸீம் என்பவரை கடந்த 2020 மே 16 ஆம் திகதி சி.ஐ.டி. கைது செய்தது. அது முதல் இதுவரை அவரை தடுத்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மோடிக்கு சர்வதேச விருது இன்று வழங்கப்படுகிறது



அமெரிக்காவின் ஹூஸ்டன் நகரில் ஆண்டுதோறும் எரிசக்தி மாநாடு (செராவீக்) நடத்தப்படுகிறது. கடந்த 1983 ஆம் ஆண்டு டேனியல் எர்ஜின் என்பவரால் நிறுவப்பட்ட இந்த நிகழ்வில், கடந்த 2016 ஆம் அண்டு முதல் சர்வதேச எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் விருதும் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டுக்கான மேற்படி விருது பிரதமர் மோடிக்கு அறிவிக்கப்பட்டு இருந்தது. இதை பிரதமர் மோடி இன்று (வெள்ளிக்கிழமை) பெற்றுக்கொள்கிறார்.

மேலும் இந்த நிகழ்வில் அவர் காணொலிக் காட்சி மூலம் முக்கிய உரையும் ஆற்றுவதாக பிரதமர் அலுவலகம் கூறியுள்ளது.

உலகளாவிய எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழலின் எதிர்காலம் குறித்த தலைமைத்துவத்தின் உறுதிப்பாடு, எரிசக்தி அணுகல், மலிவு மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கான தீர்வுகள் மற்றும் கொள்கைகளை வழங்குதலை இந்த விருது அங்கீகரிப்பதாகவும் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அமைதியாக வாழத் தகுதியான நகரங்கள் பட்டியல் வெளியீடு

மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை மந்திரி ஹர்தீப்சிங் பூரி, 'நகராட்சிகளின் செயல்திறன் குறியீடு-2020' மற்றும் அமைதியாக வாழ்வதற்கு தகுதியான நகரங்கள் பட்டியலை நேற்று வெளியிட்டார். இந்த 2 பிரிவுகளிலும் 10 லட்சம் மக்கள்தொகைக்கு அதிகமான நகரங்கள், குறைவான நகரங்கள் என தனித்தனியாக பிரித்து அவற்றில் சிறந்த தலா 10 நகரங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளன. அந்த நகரங்கள் விவரம் வருமாறு:-

வாழத் தகுதியான 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நகரங்கள் பிரிவில் பெங்களூரு முதலிடத்தில் உள்ளது. புனே மற்றும் அகமதாபாத் நகரங்கள் 2 மற்றும் 3 ஆவது இடங்களை பிடித்து உள்ளன. இந்த பட்டியலில் சென்னைக்கு 4 ஆவது இடம் கிடைத்து உள்ளது.

5 ஆவது இடத்தை சூரத், 6 ஆவது இடத்தை நவி மும்பை ஆகியவை பிடித்து உள்ளன. கோவை மாநகரம் 7ஆவது இடத்தில் உள்ளது.

வதோதரா, இந்தூர் மற்றும் கிரேட்டர் மும்பை நகரங்கள் 8 முதல் 10 வரையிலான இடங்களை பிடித்து உள்ளன.

10 லட்சம் மக்கள் தொகைக்கும் குறைவாக உள்ள நகரங்களில் சிம்லா முதலிடத்தை பிடித்து உள்ளது. புவனேஸ்வர், சில்வாசா, காக்கிநாடா ஆகியவை அடுத்தடுத்த இடங்களையும், சேலம் மற்றும் வேலூர் ஆகிய நகரங்கள் 5 மற்றும் 6 ஆவது இடங்களையும், காந்திநகர், குருகிராம், தவான்கீர் ஆகிய நகரங்கள் அதற்கு அடுத்த இடங்களையும் பிடித்து உள்ளன. 10ஆவது இடத்தை திருச்சி பிடித்துள்ளது.

10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகை கொண்ட சிறந்த நகராட்சிகள் பிரிவில் இந்தூர் முதலிடத்தை பிடித்துள்ளது. சூரத், போபால், பிம்ப்ரி சின்ஞ்வாடு, புனே, அகமதாபாத், ரெய்ப்பூர், கிரேட்டர் மும்பை, விசாகப்பட்டினம், வதோதரா ஆகியவை 2 முதல் 10 வரையிலான இடங்களை பெற்றுள்ளன. இந்த பிரிவில் தமிழக மாநகராட்சிகள் எதுவும் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

10 லட்சத்துக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட நகராட்சிகள் பிரிவில் புதுடெல்லி முதலிடத்தை பிடித்துள்ளது. திருப்பதி, காந்திநகர், கர்னால் ஆகியவை அதற்கு அடுத்தடுத்த இடங்களையும், சேலம், திருப்பூர் மாநகராட்சிகள் 5 மற்றும் 6ஆவது இடங்களையும், பிலாஸ்பூர், உதய்ப்பூர், ஜான்சி ஆகியவை 7, 8 மற்றும் 9 ஆவது இடங்களையும் பிடித்துள்ளன. திருநெல்வேலி மாநகராட்சி 10 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்த பட்டியல், மொத்தம் 111 நகரங்களை ஆய்வு செய்து தயாரிக்கப்பட்டு உள்ளது. வாழத் தகுதியான நகரங்கள் பட்டியல் அங்குள்ள வாழ்க்கைத்தரம், பொருளாதார திறன், கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டும், சிறந்த நகராட்சிகள் பட்டியல் நிர்வாக ரீதியில் அவற்றின் செயல்திறனை அடிப்படையாகக் கொண்டும் தயாரிக்கப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## குஜராத் ராணுவ அதிகாரிகள் மாநாட்டில் பிரதமர் மோடி நாளைய தினம் உரை

இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பங்கேற்கும் 3 நாள் மாநாடு குஜராத்தின் கேவடியாவில் நேற்று தொடங்கியது. இந்த மாநாட்டில் மனிதவள பிரச்சினைகள் தொடர்பான குறிப்பிட்ட சில அமர்வுகளில் முதல் முறையாக இளநிலை அதிகாரிகள் மற்றும் வீரர்களும் பங்கேற்கிறார்கள். நாளை வரை 3 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் பிரதமர் மோடி நாளை உரையாற்றுகிறார்.

லடாக்கில் சீனாவுடன் மோதல் போக்கு நீடித்து வரும் நிலையில் இந்த உயர் அதிகாரிகளின் மாநாடு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இந்த மாநாட்டில் இராணுவ மந்திரி ராஜ்நாத் சிங், முப்படைத் தலைவர் பிபின் ராவத், இராணுவத் தளபதி நரவனே, விமானப்படை தளபதி பதாரியா, கடற்படைத் தளபதி கரம்பிர் சிங் மற்றும் ராணுவ அமைச்சக மூத்த அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொள்கிறார்கள்.

## அயோத்தியில் ராமர் கோவிலை விரிவுபடுத்த ஒரு கோடிக்கு நிலம்

அயோத்தியில் பிரமாண்டமான ராமர் கோவிலை ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை கட்டி வருகிறது. கோவிலின் பரப்பளவை 70 ஏக்கரில் இருந்து 107 ஏக்கராக விரிவுபடுத்த அறக்கட்டளை நிர்வாகம் முடிவு செய்துள்ளது. எனவே, கோவிலுக்கு அருகே உள்ள இதர கோவில்கள், வீடுகள், காலி மனைகள் ஆகியவற்றின் உரிமையாளர்களிடம் பேச்சு நடத்தி வருகிறது. அந்தவகையில், முதல்கட்டமாக, கோவில் அருகே உள்ள 7 ஆயிரத்து 285 சதுர அடி நிலம் வாங்கப்பட்டுள்ளது.

சதுர அடிக்கு ரூ.1,373 என்ற விலையில், இந்த நிலத்துக்கு ரூ.1 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

அறக்கட்டளை செயலாளர் சம்பத் ராய் பெயரில், கடந்த மாதம் 20 ஆம் திகதி பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது

107 ஏக்கருக்கு கோவிலை விரிவுபடுத்த இன்னும் 14 லட்சத்து 30 ஆயிரத்து 195 சதுர அடி நிலம் வாங்க வேண்டி உள்ளது.



## காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் வெளியீடு

294 தொகுதிகளை கொண்ட மேற்குவங்காள சட்டசபைக்கு 8 கட்டங்களாக தேர்தல் நடைபெற உள்ளது. அதன்படி முதல்கட்ட தேர்தல் மார்ச் 27 ஆம் திகதி நடைபெற உள்ளது. மேலும், இறுதி மற்றும் 8 ஆம் கட்ட தேர்தல் ஏப்ரல் 29 ஆம் திகதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவான வாக்குகள் மே 2 ஆம் திகதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும்.

இத்தேர்தலில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கும் பா.ஜ.கவுக்கும் இடையே நேரடி போட்டி ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ் மற்றும் இடதுசாரிகளும் முக்கிய கட்சிகளாக உள்ளன.

இந்நிலையில், சட்டமன்றத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளநிலையில் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் மேற்குவங்காள முதல் மந்திரியுமான மம்தா பானர்ஜி வேட்பாளர்கள் பட்டியலை இன்று வெளியிட்டார். அவர் கூறிய தாவது:-

மேற்குவங்க சட்டசபைத் தேர்தலில் 291 தொகுதிகளில் திரிணாமுல் காங்கிரஸ் போட்டியிடுகிறது.

நந்திகிராம் தொகுதியில் மம்தா பானர்ஜி போட்டியிடுகிறார்.

திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலில் 50 பெண்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியர்கள் சமூகத்தைச் சேர்ந்த 42 பேர், 17 பழங்குடியினருக்கு வேட்பாளர் பட்டியலில் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

-இவ்வாறு அவர் கூறினார்.

## வேளாண் சட்டத்திற்கு எதிரான நூறாவது நாளாக தொடரும் போராட்டம்

3 வேளாண் சட்டங்களை திரும்பப் பெறக்கோரி, டெல்லியை முற்றுகையிட்டு விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகள் சங்கத்தினருக்கும், மத்திய அரசுக்கும் இடையே நடந்த 11 சுற்றுப் பேச்சும் தோல்வியில் முடிந்தது.

விவசாயிகள் அனைவரும் டெல்லியின் எல்லைப்பகுதிகளில் தடுத்து நிறுத்தப்பட்டனர். திக்ரி, காஜிபூர், சிங்கு எல்லைகளில் டிராக்டர்களை வீடுகளாக மாற்றி தங்கி சமைத்து சாப்பிட்டு போராடி வருகின்றனர் விவசாயிகள். பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கடும், குளிர், மழை, வெயிலையும் பொருட்படுத்தாமல் விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். வேளாண் சட்டங்களை திரும்ப பெற்றால் மட்டுமே போராட்டகளத்தில் இருந்து திரும்புவோம் என்று விவசாயிகள் கூறி வருகின்றனர்.

இந்த நிலையில், விவசாயிகள் போராட்டம் இன்று 100 ஆவது நாளை எட்டியுள்ளது. போராட்டக் களத்தில் இதுவரை 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிரிழந்துள்ளனர்.

## லொட்டறியில் ரூபாய் 80 லட்சம் பரிசு திருட்டு பயத்தால் பொலிஸிடம் உதவி

மேற்குவங்க மாநிலத்தை சேர்ந்தவர் பிரதீபா மண்டல். இவர் கேரள மாநிலம் திருவனந்தபுரம் அருகே உள்ள மருதங்குழி பகுதியில் தங்கியிருந்து கட்டிட தொழிலாளியாக வேலைபார்த்து வந்தார்.

இவரது குடும்பத்தினர் மேற்கு வங்கத்திலேயே உள்ளனர். பிரதீபா மண்டல் மட்டும் கேரளாவில் தங்கியிருந்து வேலை பார்த்தார். வறுமை காரணமாக குடும்பத்தை பிரிந்து வாழ்ந்து வந்தார்.

பிரதீபா மண்டலுக்கு லொட்டறி சீட்டுகள் வாங்கும் பழக்கம் இருந்துள்ளது. கடந்த 2 நாள்களுக்கு முன்பு கேரள அரசின் காருண்ய பாக்கியகுறி லொட்டறி வாங்கினார். அதில் அவருக்கு பம்பர் பரிசான இந்திய ரூ.80 லட்சம் விழுந்தது.

இதனையறிந்த பிரதீபா மண்டல் மகிழ்ச்சி அடைந்தார். அதே வேளையில் பெரிய தொகை தனக்கு பரிசு விழுந்ததால் அவருக்கு பயமும் ஏற்பட்டது. அதனை யாராவது பறித்துச்சென்று விடுவார்கள் என்று கருதிய அவர், பூஜப்புரா பொலிஸ்நிலையத்துக்கு சென்றார்.

அவர் தனக்கும், தனக்கு பரிசு விழுந்த லொட்டறி சீட்டுக்கும் பாதுகாப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டார். இதையடுத்து அவர் கூறுவது உண்மைதானா? என்று சம்பந்தப்பட்ட லொட்டறி நிறுவனத்தை தொடர்பு கொண்டு பேசினர்.



அப்போது பிரதீபா மண்டலுக்கு லொட்டறியில் ரூ.80 லட்சம் விழுந்துள்ளதை உறுதி செய்தனர். இதையடுத்து பிரதீபா மண்டலுக்கு விழுந்த லாட்டரி சீட்டு தொகையை வங்கியில் வைப்புச் செய்யநடவடிக்கைஎடுக்கப்பட்டது.

ஆனால் பிரதீபா மண்டலுக்கு நிரந்தரமாக வீடு இல்லாததால் முகவரி எதுவும் இல்லை. வங்கியில் சேமிப்பு கணக்கும் இல்லை. இதனால் அவருக்கு விழுந்த பரிசுத்தொகையை வங்கியில் வைப்புச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அதுபற்றி வங்கி அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

அதன்பேரில் பிரதீபா மண்டலுக்கு தற்காலிகமாக ஒரு முகவரியில்வங்கியில்கணக்குதொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அவருக்கு வங்கியில் இன்று புதிதாக கணக்கு தொடங்கப்பட்டது. பிரதீபா மண்டலுக்கு விழுந்த லொட்டறி சீட்டையும், அவரையும் பொலிஸார் தங்களது வாகனத்தில் பாதுகாப்புடன் வங்கிக்கு அழைத்து சென்றனர்.

பின்பு அவரது லொட்டறி சீட்டு வங்கி லாக்கரில் பாதுகாப்பாக வைக்கப்பட்டது. லொட்டறியில் இந்திய ரூ.80 லட்சம் விழுந்தது குறித்து பிரதீபா மண்டல் கூறியதாவது:-

மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. பரிசு விழுந்த லொட்டறி சீட்டை யாராவது பறித்துச்சென்று விடுவார்கள் என்று கருதியதால் பொலிஸ் நிலையத்திற்கு சென்று பாதுகாப்பு கேட்டேன்.

அவர்களின் பாதுகாப்புடன் பரிசுத் தொகையை வங்கிக்கு கொண்டு சென்றேன். இந்த பரிசுத் தொகையில் புதிய வீடு கட்டுவேன். புதிய கார் வாங்குவேன்.

– இவ்வாறு அவர் கூறினார்.

# ஆப்கானிஸ்தானில் பனிச்சரிவு 14 பேர் பலி; மூவர் படுகாயம்!



ஆப்கானிஸ்தான் நாட்டின் பதக்ஷான் மாகாணத்தில் ரகீஸ்தான் மாவட்டத்தில் ஹாவ்ஜ் இ ஷா என்ற பகுதியில் திடீரென பனிச்சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் கிராமவாசிகள் 14 பேர் சிக்கி கொண்டனர். பின்னர் அவர்கள் சடலமாக மீட்கப்பட்டனர்.

இதுதவிர 3 பேர் காயமடைந்து உள்ளனர். இதனை அரசின் உள்ளூர் செய்தி தொடர்பு அதிகாரி நிக் முகமது நஜாரி உறுதிப்படுத்தினார்.

சமீப வாரங்களாக பதக்ஷான் பகுதியில் பனிப்பொழிவுகள் அதிகரித்து காணப்படுகின்றன. மலைப்பிரதேசத்தில் மாவட்ட சாலை ஒன்றில் இந்த பேரிடர் ஏற்பட்டு உள்ளது.

இதையடுத்து மீட்புக் குழு ஒன்றும், உள்ளூர் போலீசாரும் சம்பவ பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் சம்பவ பகுதியில் உள்ள மக்களுக்கு தேவையான உதவிகளை செய்வதற்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர்.

## கொரோனா அச்சுறுத்தலால் பாஸ்ட் அண்ட் ப்யூரியஸ் - 9 வெளிவரும் திகதி தள்ளிவைப்பு



ஹொலிவுட் பட ரசிகர்களுக்கு பெருத்த ஏமாற்றமாக பாஸ்ட் அண்ட் ப்யூரியஸ் 9 படத்தின் வெளிவரும் திகதி தள்ளி வைக்கப்பட்டு உள்ளது.

முன்னணி நட்சத்திரங்கள் வின் டீசல், மிச்செல் ரோட்ரிக்ஸ் உள்ளிட்டோர் நடித்து பிரபல யுனிவர்சல் பிக்சர்ஸ் தயாரிப்பில் வரும் மே மாதம் 28 ஆம் திகதி படம் வெளிவரத் தயாராக இருந்தது.

இந்த நிலையில் அமெரிக்காவில் கொரோனா பரவல் குறையாததை அடுத்து படத்தின் படத்தை வெளியிடும் திகதியை ஜூன் 25 ஆம் திகதிக்கு மாற்றி பட நிறுவனம் அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிட்டு உள்ளது.

## 1,500 கிலோ எடையுள்ள டிரக்கை 16 மணி நேரம் இழுத்து ஆஸ்திரேலிய தடகள வீரர் உலக சாதனை படைத்தார்




ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த தடகள வீரர் ஒருவர் 1,500 கிலோ எடையுள்ள ட்ரக் ஒன்றை சுமார் 42கிலோ மீற்றர் தூரத்திற்கு 16 மணி 12 நிமிடங்களில் இழுத்து சென்று உலக சாதனை படைத்துள்ளார்.

Corey Phillpott என்ற 23 வயது தடகள வீரர் இந்த சாதனைக்கு சொந்தக்காரர் ஆவார்.

இதற்கு முன்பு அமெரிக்காவைச் சேர்ந்த தடகள வீரரான Justin True என்பவர் இதே அளவு எடை கொண்ட ட்ரக்குடன் சுமார் 42 கிலோ மீற்றர் தூரத்திற்கு 17 மணி நேரம் இழுத்து சென்றதே சாதனையாக இருந்து வந்தது.

தற்போது அந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.


## துருக்கியில் ஹெலிகொப்டர் விபத்து வெடித்துச் சிதறியதில் 11 பேர் பலி!



துருக்கியில் இராணுவ ஹெலிகொப்டர் விழுந்து நொறுங்கிய விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள பிட்லிஸ் மாகாணத்தில் ராணுவ ஹெலிகொப்டர் ஒன்று பறந்து சென்றது. அதில் லெப்டினன்ட் ஜெனரல் ஓஸ்மான் எர்பாஸ் உள்ளிட்ட ராணுவ அதிகாரிகளும், வீரர்களும் சென்று கொண்டிருந்தனர். அப்போது ஏற்பட்ட கோளாறு காரணமாக ஹெலிகொப்டர் கீழே விழுந்து நொறுங்கியது. இதில் 9 பேர் நிகழ்விடத்தில் உயிரிழந்தனர். காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி மேலும் 2 பேர் உயிரிழந்தனர்.

## நாசா விஞ்ஞானிகளுக்கு அதிபர் பைடன் வாழ்த்து




நாசா விஞ்ஞானிகளுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வாழ்த்து தெரிவித்து உள்ளார்.

அண்மையில் நாசாவின் பெர்சிவரன்ஸ் ரோவர் வெற்றிகரமாக செவ்வாய் கிரகத்தில் தரையிறக்கப்பட்டு ஆய்வு மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் நாசாவின் வெற்றி முயற்சிக்கு வாழ்த்து தெரிவித்து உள்ள அதிபர் ஜோ பைடன், செவ்வாய் கிரகத்தில் பெர்சிவரன்ஸ் ரோவரை தரையிறக்கியது பெரிய விஷயம் என்றும் இது அமெரிக்கர்களின் உத்வேகத்தை எடுத்து காட்டுகிறது என புகழ்ந்து உள்ளார்.

## நியூசிலாந்து மக்களுக்கு சுனாமி எச்சரிக்கை கடந்த 8 மணி நேரத்தில் 3 முறை நில நடுக்கம்



நியூசிலாந்தில் சுனாமி எச்சரிக்கை சைரன் ஒலிக்கப்பட்டு உள்ளது.

ஆக்லாந்து, பே ஆப் பிளண்டி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த 8 மணி நேரத்திற்குள் அடுத்தடுத்து 3 முறை நில நடுக்கம் ஏற்பட்டதை அடுத்து அங்கு பதற்றம் நிலவி வருகிறது.

இந்த நிலையில் கடலோர பகுதிகளில் உள்ள 10 லட்சத்து 70 ஆயிரம் மக்களுக்கு பாதுகாப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் செல்லுமாறும், மீட்பு பணிகள் தயாராக இருக்க அறிவுறுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## வங்காளதேச முன்னாள் பிரதமர் கலீதா ஜியா தண்டனை இரத்தா?



வங்காள தேசத்தின் முன்னாள் பிரதமர் கலீதா ஜியா (வயது 74). 3 முறை பிரதமர் பதவி வகித்த இவருக்கு, 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி ஊழல் வழக்கில் 17 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தநிலையில், அவருக்கு உடல் நலத்தை காரணம் காட்டி கடந்த ஆண்டு மார்ச் மாதம் 6 மாதம் பிணை வழங்கப்பட்டது. பின்னர் கடந்த செப்ரெம்பர் மாதம், மேலும் 6 மாதம் பிணை நீட்டிக்கப்பட்டது. இது வரும் 25 ஆம் திகதி முடிகிறது.

அவர் உள்நாட்டில் சிகிச்சை பெறலாம், வெளிநாட்டுக்கு செல்லக்கூடாது என்பது பிணை நிபந்தனை ஆகும்.

தற்போது அவரது உடல்நலக் குறைவை கருத்தில் கொண்டு தண்டனையை ரத்து செய்வது குறித்து வங்காளதேசத்தின் சேக் ஹசினா அரசு பரிசீலனை செய்து வருகிறது.

இதுகுறித்து அந்த நாட்டின் உள்துறை மந்திரி அசதுஸ்ஸாமான் கான் கமல் கூறுகையில், வங்காளதேச தேசியவாத கட்சியின்தலைவர் கலீதா ஜியாவின் தண்டனையை இரத்து செய்து, விடுவிப்பது குறித்து சட்ட அமைச்சகத்துடன் கலந்து ஆலோசித்து முடிவு செய்யப்படும். இதையொட்டி அவரது சகோதரர் சமீம் இஸ்கந்தரிடம் இருந்து ஒரு கடிதம் வந்துள்ளது. அது சட்ட அமைச்சகத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

இதனால் கலீதா ஜியாவின் தண்டனை இரத்தாகுமா என்ற எதிர்பார்ப்பு அங்கு எழுந்துள்ளது.

## சீனாவில் பனி மலைக்கு நடுவே வரிசைக்கட்டி செல்லும் ஆடுகள்

சீனாவில் பனி மலை மீது ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் மேய்ச்சலுக்காக வரிசைக்கட்டி அழைத்து செல்லப்படும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

சின்ஜியாங் மாகாணத்தில் உள்ள டெக்ஸ் பகுதியில் பசுக்கள், செம்மறி ஆடுகள் உள்ளிட்ட ஒரு லட்சத்து 20 ஆயிரம் கால்நடைகள் மேய்ச்சலுக்காக அழைத்து செல்லப்பட்டன.

கால்நடைகளின் இந்த இடம்பெயர்வு 20 நாள்களுக்கு நடைபெறும் எனக் கூறப்படுகிறது.



கடந்த 5 மாதங்களாக குளிர் கால மேய்ச்சலில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததாகவும், குளிர் கால மேய்ச்சல் ஜனவரி 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்து வசந்தகால இடம்பெயர்வு தொடங்கியிருப்பதாகவும் ஆடு மேய்ப்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# கத்தோலிக்கரும் முஸ்லிம்களும் முட்டாள்கள் அல்லர் - ஹரின்



கத்தோலிக்க பூமியில் சடலங்களை அடக்கம் செய்ய தீர்மானித்து மீண்டும் பிரச்சினைகளை தோற்றுவிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது.

ஆனால் இவ்வாறான செயற்பாடுகளில் ஏமாறுமளவிற்கு கத்தோலிக்க மக்களும் முஸ்லிம் மக்களும் முட்டாள்கள் அல்லர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் போது கத்தோலிக்க மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் முரண்பாடுகளை தோற்றுவிக்க முயற்சித்தமையைப் போலவே, தற்போதும் கத்தோலிக்க பூமியில் சடலங்களை அடக்கம் செய்யத் தீர்மானித்து,

மீண்டும் பிரச்சினைகளை தோற்றுவிக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆனால் கத்தோலிக்க மக்களும் முஸ்லிம் மக்களும் அவ்வாறான முட்டாள்கள் அல்லர்.

2013 ஆம் ஆண்டிலிருந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை மேற்கொள்ளும் வரை சஹ்ரானை பாதுகாத்தவர்கள் யார் என்ற தகவல்கள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். இந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படாமை கவலைக்குரியதாகும்.

எனவே தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையால் திருப்தியடைய முடியாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தற்போதைய அரசாங்கத்தின் தேவைக்காகவே முன்னெடுக்கப்பட்டவை என்று கூறப்படுகிறது.

அவ்வாறு எதுவும் இல்லை என்று நிரூபிப்பதற்காவது அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். ஆனால் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நியாயத்தை இறைவனிடமே கேட்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

தாக்குதல்கள் இடம்பெற்ற போது அது தொடர்பான தகவல்களை அறிந்திருக்காதவன் என்ற வகையில் நான் வெட்கமடைகின்றேன். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இது தொடர்பில் அறிந்திருக்கவில்லை. ஆனால் தற்போது அது பிரச்சினையல்ல.– என்றார்.

# மக்கள் பிரச்சினையை ஜனாதிபதி முன் கொண்டுசென்று தீர்க்க நடவடிக்கை!

## கிழக்கு ஆளுநர் முயற்சி



கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களை வரவழைத்து, 'கிராமத்துடனான உரையாடல்' நிகழ்ச்சியின் போது மக்கள் எழுப்பிய அனைத்து பிரச்சினைகளையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரியப்படுத்தி தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளார் எனத் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் தெரிவித்தவை வருமாறு –

மாகாண அமைச்சுக்களின் அனைத்து செயலாளர்களையும் வரவழைத்து, திருகோணமலை,கோமரங்கடவெலவில் உள்ள கிராமத்துடன் பேச்சு நிகழ்ச்சியின் போது எழுந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மாகாண அமைச்சுக்களின் அனைத்து செயலாளர்களையும் வரவழைத்தார்.

திருகோணமலை வட கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களின் கடுமையான பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கான செயல்முறையை விரைவுபடுத்தவும், ஆசிரியர் உதவியாளர்களாக ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தேவையான ஆவணங்களை சரிசெய்யவும் ஆளுநர் மாகாண கல்வி செயலாளருக்கு இதன் போது அறிவுறுத்தினார்.

இந்தப் பகுதியில் ஆசிரியர் விடுதிகளை நிர்மாணிக்கத் தேவையான நிதி ஒதுக்கீட்டை விரைவில் வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

விவசாய நடவடிக்கைகளுக்கான நிலங்களை மக்களுக்கு விரைவாக வழங்குவதற்காக பிரதேச செயலகங்கள் மூலம் உரிய அதிகாரிகளுக்குத் தேவையான தகவல்களை விரைவாக விரைவுபடுத்த நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் விரிவாக பேசப்பட்டது.

போருக்கு முன்னர் இப்பகுதியில் வாழ்ந்த மக்களுக்கு நிலங்களை ஒதுக்கீடு செய்வதற்கும், மாற்று நிலங்களை வழங்குவதற்கும், காடுகளைப் பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டிய அவசியத்தை ஆளுநர் வலியுறுத்தினார்.

மேலும், மாவட்டத்தில் நச்சுத்தன்மையற்ற விவசாய முறையை விரைவில் அறிமுகப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆளுநர் மாகாண விவசாய அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தினார்.

மாவட்டத்தில் உள்ள சுகாதார பிரச்சினைகளை அடையாளம் காணவும், அந்த பிரச்சினைகளை விரைவாக தீர்க்க மத்திய அரசுடன் கலந்தாலோசித்து தீர்வு காணவும் ஆளுநர் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

எதிர்காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் செயற்படுத்தப்படவுள்ள சுற்றுலா தொடர்பான திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

ஆராயப்பட்ட சிக்கல்களைத் தீர்க்க ஒரு மாதத்திற்குள் மற்றொரு முன்னேற்ற ஆய்வுக் கூட்டத்தை நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

# தனது காணியை விடுவிக்கக்கோரி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் நுழைந்த பெண்ணால் பரபரப்பு!



வனவளத் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்ட தனது காணியை விடுவிக்க கோரி பல வருடங்களாக போராடிய பெண் ஒருவர் இது வரை நியாயம் கிடைக்காத நிலையில் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற போது கூட்டத்திற்குள் அத்து மீறி நுழைந்து ஆளுநரிடம் பிரச்சினையை எடுத்துக்கூற முயன்றமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில் –

முருங்கன் பிட்டி பகுதியைச் சேர்ந்த சீவரத்தினம் தயாள சீலி என்ற பெண்ணுக்கு சொந்தமான 15 ஏக்கர் காணியை வனவள திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டு சுமார் ஐந்து வருடங்கள் கடந்துள்ளன.

எனினும் இது வரை தனது காணி விடுக்கப்படாத நிலையில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் உணவுக்கே வழியின்றி தனது 75 வயதான தாயுடன் வாழ்க்கை நடத்தி வருகின்றார்.

மேற்படி பிரச்சினை தொடர்பாக பிரதேச செயலகம் , அமைச்சர்கள், ஒருங்கிணைப்பு குழு, ஜனாதிபதி செயலகம் , மாவட்ட செயலகம் உட்பட பல இடங்களுக்கு நேரில் சென்று முறையிட்டும் கடிதங்கள் அனுப்பியும் இதுவரை முடிவுகள் எதுவும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற நிலையில் குறித்த கூட்டத்துக்கு சென்று நேரடியாக நீதி கோரி கூட்டத்திற்குள் நுழைந்த போது குறித்த பெண்ணுக்கு பாதுகாப்பு தரப்பினரால் உள்ளே நுழைய அனுமதி வழங்கப்படவில்லை.

எனினும் அந்தப் பெண் தனக்கான நீதியை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் பேசி தீர்த்து தர வேண்டும் என கோரி கூட்டம் முடியும் வரை காத்திருந்த போதிலும் ஏமாற்றமே மிஞ்சியது.

இருப்பினும் கூட்டம் நிறைவடைந்த பின்னர் தனது கோரிக்கை அடங்கிய மகஜரை வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸிடம் இறுதியில் ஒப்படைத்தார்.

மேற்படி பெண்ணுக்கு அண்மையில் ஏற்பட்ட விபத்தில் 15 இடங்களில் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளமையுடன் தலை உட்பட உடலில் பல பகுதிகள் தகடுகள் வைக்கப்பட்ட நிலையில் நோயுடன் போராடி வருகின்ற நிலையில் மேற்படி வனவளத் திணைக்களம் காணியை கையகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதையுடன் நான்கு பேர் கைது!

தலைமன்னார் – ஊருமலை பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

தலைமன்னார் – ஊருமலை கடற்பகுதியில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது ஐஸ் போதைப் பொருளுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையின் ரோந்து நடவடிக்கையின்போது சந்தேகத்திற்கிடமான மீன்பிடி படகொன்றை அவதானித்துள்ள படையினர் அதனை சோதனைக்குட்படுத்தியுள்ளனர்.

இதன்போது படகில் மீன்பிடி வலைக்குள் மிகவும் சூட்சகமான முறையில் மறைத்து எடுத்துவரப்பட்ட ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களால் சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட, ஒரு கிலோ 21 கிராம் ஐஸ் போதைப் பொருளை கைப்பற்றியுள்ள கடற்படையினர், படகில் வந்த மூன்று பேரையும் கைது செய்துள்ளனர்.

இதனைத்தொடர்ந்து அந்த பகுதியிலிருந்த இன்னுமொருவரையும் சந்தேகத்தில் கைது செய்துள்ளனர்.

ஊருமலை பகுதியைச் சேர்ந்த 23 – 33 வயதுடைய நால்வரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கடற்படையினர் சந்தேகநபர்களை மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt.Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.03.2021 இல் வெளியிடப்பெற்றது.